விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–12.26 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –01.15 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.NO.68/2020**

**Respondent side witness : அ.சா.1** **Date : 07.12.2024**

| | |
|---|---|
| **Name : பரசுராமமூர்த்தி** | **Taluk : தர்மபுரி** |
| **Father Name : சுந்தரம்** | **Calling : வனச்சரக அலுவலர்** |
| **Village : தர்மபுரி** | **Age : 47** |
| | |

(Accused Present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1. இந்த வழக்கில் 14.12.2019 ம் தேதி சுமார் 07.00 மணியளவில் சம்பவம் இடமான எதிரியின் தோட்டத்திற்கு அருகில் ஓடை புறபோக்கான ஆக்கிரமிப்பு செய்து வைத்திருந்த யானை இறந்த இடத்தில் வைத்து உள்ளூர்தண்டா தெற்குபிரிவு வனவர் திரு.சுந்தரராசு என்பவரால் ஸ்தலமகஜர் அறிக்கை அதனுடன் கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்கள் பற்றி அறிக்கை தயார் செய்தார். அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன். ஸ்தலமகஜர் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சம்பவம் இடத்தில் வைத்து வனக்காப்பாளர் பத்ரன் அவர்கள் ெஹச்நமுனா தயார் செய்தார். இந்த சம்பவம் குறித்து வனக்காப்பாளர் பத்ரன் அவர்கள் தனிஅறிக்கை ஒன்றை வனவரின் மூலமாக வனசரக அலுவலராகிய என்னிடம் ஒப்படைத்துள்ளார். வனக்காப்பாளர் பத்ரன் என்பவரால் மாதிரி சம்பவம் வரைப்படம் தயார் செய்யப்பட்டது. சம்பவம் இடத்தில் கைப்பற்றி

பிடிபொருட்களை பிடிபொருள் பட்டியல் மூலம் வனக்காப்பாளர் பத்ரன் தயார் செய்தார். அதில் நான் கையெழுத்து செய்தேன். **பிடிபொருள் பட்டியலில் யானையின் தந்தங்கள்**

**1.** (1) வலது தந்தம் நீளம் – 132 செ.மீ. நடுப்பகுதி சுற்றளவு – 29 செ.மீ., எடை 11.700 கி.கிராம்.

(2) இடது தந்தம் நீளம் – 120 செ.மீ. நடுப்பகுதி சுற்றளவு – 29 செ.மீ., எடை 10.400 கி.கிராம்.

**2.** (1). வேம்பு மரக்குச்சி நீளம் – 114 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 13 செ.மீ.

(2) வேம்பு மரக்குச்சி நீளம் – 127 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 11 செ.மீ.

(3) வேம்பு மரக்குச்சி நீளம் – 125 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 11 செ.மீ.

(4) வேம்பு மரக்குச்சி நீளம் – 117 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 11 செ.மீ.

(5) வேம்பு மரக்குச்சி நீளம் – 120 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 9 செ.மீ.

(6) வேம்பு மரக்குச்சி நீளம் – 109 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 9 செ.மீ.

(7) வேம்பு மரக்குச்சி நீளம் – 111 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 9 செ.மீ.

(8) வேம்பு மரக்குச்சி நீளம் – 106 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 9 செ.மீ.

(9) வேம்பு மரக்குச்சி நீளம் – 99 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 11

செ.மீ.

(10) பொரசு மரக்குச்சி நீளம் – 102 செ.மீ., பட்டையுடன் மைய சுற்றளவு – 12 செ.மீ.

**3.** இரும்பு கட்டு கம்பி சுருள்கள் எடை – 5 கிலோ கிராம் – ஒரு கட்டு.

2. மேற்கண்ட வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 95 உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** யானை மின்சாரம் தாக்கி இறந்தது குறித்து உதவி செயற்பொறியாளர் கொளத்தூர் என்பவருக்கு சம்பவம் நடந்த சமயத்தில் மின்சாரம் இருப்பு நிலைக்குறித்து வேண்டுகோள் கடிதம் வைத்தேன். அதேபோல லக்கம்பட்டி கிராமம் நிர்வாக அலுவலருக்கு சம்பவம் இடம் பாத்தியம் குறித்து ஒரு வேண்டுகோள் கடிதம் வைத்தேன். மின்சார வாரியத்திலிருந்து 14.12.2019 ம் தேதியில் அன்றைய தினம் யானை இறந்த எதிரியின் இடத்தில் தடையில்லா மின்சாரம் இருந்ததாக எழுத்து மூலமாக உதவி செயற்பொறியாளர் கொளத்தூர் சான்றிதழ் கொடுத்தார். அன்றைய தினமே நில அளவையர் அவர்கள் யானை இறந்த இடமானது ஆஜர் எதிரியால் அரசு புறபோக்கு நிலத்தில் 10 சென்ட் பரப்பளவில் ஆக்கிரமிப்பு செய்து மக்காச்சோளம் பயிரிட்டுள்ளார் என்றும் அந்த நிலத்தில் தான் யானை இறந்துவிட்டது என்றும் அதை குறித்து புலப்படம் ஒன்றை லக்கம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்பு எதிரியின் கைது குறித்து அவருடைய சம்மந்தி மகன் தர்மராஜன் என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் இடம் குறித்து கூகுள் மேப்பை தாக்கல் செய்தேன். **(கூகுள் மேப் (GPS அளவீடுகள்) அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இறந்து போன யானையை சம்பவம்

இடத்தில் கால்நடை மருத்துவர் பிரேத பரிசோதனை செய்து புதைத்ததை புகைப்படம் எடுத்தும் குறுந்தகடு மூலமாகவும் பதிவு செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு அ.த.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த ஆஜர் எதிரி பெரியசாமி கவுண்டர் மகன் தங்கவேல் வயது சுமார் 70 என்பவர் கடந்த 16.12.2019 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் மேட்டூர் வனசரக அலுவலகத்தில் சரண் அடைந்தவரை நான் விசாரித்த போது அவர் தானாக முன்வந்து யாருடைய தூண்டுதல் மற்றும் வற்புறுத்தல் இன்றி சுயநினைவுடன் தன்னிச்சையாக ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை என் முன்னிலையில் உள்ளூர்தன்டா தெற்கு பிரிவு வனவர் சுந்தரராசு என்பவர் பதிவு செய்தார். அதில் குறும்பனூர் வனக்காப்பாளர் பத்ரன் சாட்சி கையொப்பம் செய்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என் முன்னிலையில் பதிவு செய்ப்பட்டது என்பதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4.** 16.12.2019 ம் தேதி எதிரியின் மீது வன உயிரின குற்ற வழக்கு எண்.4/2019 ஆக வழக்கு பதிவு செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எதிரியை தக்க வழிக்காவலுடன் அடைப்பு காவலுக்கு கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நீதிமன்றம் உத்தரவுப்படி எதிரியை சேலம் மத்திய சிறையில் ஒப்படைத்தேன். இந்த வழக்கில் கைப்பற்றி வழக்கு சொத்துக்களை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

5. நான் 12.01.2020 ம் தேதி முற்பகல் எனது கூடுதல் பொறுப்பு பணிகளை வனசரக அலுவலர் திரு.பிரகாஸ் அவர்களிடம் ஒப்படைத்து பணியிலிருந்து விடுபட்டேன்.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**